மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்
முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.298/2025
in
அ.வ எண்.42/2025

சாத்தான்குளம் வட்டம்,
தச்சமொழி கிராமத்தில் உள்ள
ஆசிர்வாதபுரம், சாத்தான்குளம், தச்சமொழி,
பண்டாரஞ்செட்டிவிளை,
இந்து நாடார்களுக்குச் சொந்தமான
அருள்மிகு பெருமாள்சாமி கோவில்
அதன் வாரிசுதாரர்களின் பிரதிநிதி நிலையில்
அதன் வரிதாரர்களான
1. இமயவரம்பன்
2. ஜோதிமணி .........மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. துணை ஆணையர்,
இந்து அறநிலையத்துறை,
தூத்துக்குடி

2. ஆணையர்,
இந்து அறநிலையத்துறை,
சென்னை.

3. தமிழ்நாடு அரசு அதன் தூத்துக்குடி,
மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக,
கோரம்பள்ளம்
தூத்துக்குடி ..........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெயசிங் மதுரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.A.ரகுபத்மன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.09 17:40:36 +0530

உத்தரவு

இம்மனுவானது இதன் மனுவின் அடியிற்கண்ட விபரப்படி வழக்குரையை சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனுவின் சுருக்கம்**:

2.1 பெருமாள்சாமி கோவிலுக்கு சாத்தான்குளம், தச்சன்மொழி ஆசிர்வாதபுரம் பண்டாரஞ்செட்டிவிளையில் 200க்கு மேற்பட்ட வரிதாரர் குடும்பங்கள் உள்ளது. அவர்கள் அனைவருக்கும் பெருமாள்சாமி கோவிலில் Denomination temple என விளம்புகை செய்ய கோருவதில் ஒரே விதமான அக்கறை உள்ளது. அவர்கள் அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்துவது இயலாத ஒன்றாகும்.

2.2 இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியை குறிப்பிடும்பொழுது இனை ஆணையர் என குறிப்பிடுவதற்கு பதிலாக தட்டச்சு பிழை காரணமாக துணை ஆணையர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தவறு தற்போதுதான் தெரியவந்தது.

2.3 எனவே 1ம் பிரதிவாதியின் பதவி பொறுப்பை எனது வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது இதன் மனுவின் அடியிற்கண்ட விபரப்படி வழக்குரையை சீர்திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் பெருமாள்சாமி கோவிலுக்கு சாத்தான்குளம், தச்சன்மொழி ஆசிர்வாதபுரம் பண்டாரஞ்செட்டிவிளையில் 200க்கு மேற்பட்ட வரிதாரர்

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.09 17:40:42 +0530

குடும்பங்கள் உள்ளது என்றும் அவர்கள் அனைவருக்கும் பெருமாள்சாமி கோவிலில் Denomination temple என விளம்புகை செய்ய கோருவதில் ஒரே விதமான அக்கறை உள்ளது என்றும் அவர்கள் அனைவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்துவது இயலாத ஒன்றாகும் என்றும் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியை குறிப்பிடும்பொழுது இனை ஆணையர் என குறிப்பிடுவதற்கு பதிலாக தட்டச்சு பிழை காரணமாக துணை ஆணையர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட தவறு தற்போதுதான் தெரியவந்தது என்றும் எனவே 1ம் பிரதிவாதியின் பதவி பொறுப்பை எனது வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M Digitally signed by SIVA RAJESH M Date: 2025.09.09 17:40:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

SIVA RAJESH M Digitally signed by SIVA RAJESH M Date: 2025.09.09 17:40:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.298/2025இன்
அ.வ.எண்.42/2025
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 09.09.2025